MKU/SO (P&D) 2020 நாள்: 06/02/2020

மதுரை காமராஜர் பல்கலைக்கழகத் தமிழியற்புல ஒப்பிலக்கியத்துறை, சான்லாக்ஸ் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழுடன் இணைந்து 07.02.2020 அன்று **'திராவிட மொழி இலக்கியங்களில் ஒப்பிலக்கிய அணுகுமுறைகள்'** என்னும் பொருண்மையில் பன்னாட்டுக் கருத்தரங்கத்தினை நடத்தியது. இந்நிகழ்வில் தமிழியற் புலத்தலைவர் பேரா.வை.இராமராஜபாண்டியன் அவர்கள் தலைமைவகித்தார். முனைவர் உ.கருப்பத்தேவன் அவர்கள் நோக்கவுரையும், முனைவர் பெ.சுமதி அவர்கள் வரவேற்புரையும் நிகழ்த்தினர். பல்கலைக்கழகப் பதிவாளர் பேரா.ந.சங்கர் அவர்கள் வாழ்த்துரையும், காந்தி கிராம கிரமிய நிகர்நிலைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் பா.ஆனந்தகுமார் அவர்கள் மையவுரையும், மொரிசியஸ் நாட்டில் உள்ள மகாத்மா காந்தி நிறுவனப் போராசிரியர் ஜீவேந்திர சீமான் அவர்கள் சிறப்புரையும் நிகழ்த்தினர். மேலும், சான்லாக்ஸ் பன்னாட்டுத் தமிழிதழின் முதன்மைப் பதிப்பாசிரியர் முனைவர் ந.முருகேசபாண்டியன் **'ஆய்வு அன்றும் இன்றும்'** என்ற பொருண்மையில் உரை நிகழ்த்தினார். நிறைவு விழாவில் பல்கலைக்கழக ஆட்சிக்குழு உறுப்பினர் முனைவர் சு.பாரிபரமேஸ்வரன் அவர்கள் கலந்து கொண்டு கருத்தரங்கில் பங்குபெற்றோர் மற்றும் கட்டுரையாளர்களுக்குச் சான்றிதழ் வழங்கி சிறப்பித்தார்.

1. திராவிடமொழி இலக்கியங்களில் ஒப்பாய்வுக் களங்களும் அணுகுமுறைகளும்.
2. திராவிட மொழிக் கவிதைகளில் ஒப்பிலக்கிய அணுகுமுறைகள்.
3. அயல்நாடுகளில் திராவிடர்களின் அடையாளங்களும் விழாக்களும்.
4. திராவிட மொழிப் பக்தி இலக்கியங்களில் ஒப்பிலக்கிய அணுகுமுறைகள்.
5. ஆய்வுப் போக்குகள் - அன்றும் இன்றும்.
6. ஒப்பிலக்கிய ஆய்வு அணுகுமுறையில் கம்பனின் இராமாயணமும் மில்டனின் இழந்த சொர்க்கமும்
7. திராவிட மொழிப் புதினங்களில் ஒப்பிலக்கிய அணுகுமுறைகள்.

ஆகிய பொருண்மைகளில் கட்டுரைகள் வாசித்தளிக்கப்பட்டன. இறுதியாக முனைவர் செ.ரவிசங்கர் நன்றி கூறினார்.


மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
(ஆற்றல்சால் பல்கலைக்கழகம்)
தமிழியற்புல ஒப்பிலக்கியத்துறை மற்றும்
சான்லாக்ஸ் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்
UGC-CARE Journal
இணைந்து நடத்தும்
பன்னாட்டுக் கருத்தரங்கம்
திராவிட மொழி இலக்கியங்களில்
ஒப்பிலக்கிய அணுகுமுறைகள்
07.02.2020









